மாவட்ட செயலாளர் தங்க தமிழ் செல்வனும் அதே பிரிவைச் சேர்ந் தவர். இந்நிலையில் பிறமலைக் கள்ளர் சமூகத்திற்கு ஆதரவாக தங்க தமிழ் செல்வன் செயல்படுகிறார் என்ற குற்றச்சாட்டு இருந்து வந் தது. இந்தநிலையில் தர்மராஜை சமாதானம் செய்த மாவட்ட செய லாளர் அந்த இடத்திற்கு மறவர் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் நியமிக் கப்பட்டால் தன் மீது அப்படியொரு பார்வை படியாது என்று கரு தினார். இதனால் தலைமைக் கழகத்திற்கு அவர் அனுப்பிய பட்டிய லில் கடமலைக் குண்டு ஒன்றிய செயலாளர் பதவிக்கு முருக்கோடை ராமரை சிபாரிசு செய்து அனுப்பியிருந்தார். ஆனால் அது தெரியா மலேயே தங்க தமிழ் செல்வன் மீது புகார் சொல்லிவிட்டார் முருக் கோடை ராமர்.

இந்தநிலையில் கட்சி மேலிட உத்தரவுப்படி தேனி வந்த சிலர் முருக்கோடை ராமரை நைஸாகப் பேசி சென்னைக்கு அழைத் துப் போயிருக்கிறார்கள். அங்கு வைத்து கட்சி மேலிடம் அவரி டம் விசாரணை நடத்தியிருக்கிறது. அப்போதும்கூட கதிரேசனி டம் தங்க தமிழ் செல்வன் பணம் வாங்கியிருக்கிறார் என்றே ராமர் புகார் சொல்லியிருக்கிறார். அந்த விசாரணையை நடத்திய அம்மா வின் நம்பிக்கைக்குப் பாத்திரமான சின்னம்மா சசிகலா முருக்கோடை ராமரிடமே அந்தப் பட்டியலைக் காட்டினாராம். அதோடு, ‘தங்க தமிழ்செல்வன் கதிரேசனிடம்

# லாமா?’

# ாகியை எச்சரித்த சசிகலா!

பணம் வாங்கியிருந்தால் அந்த இடத்திற்கு அவரைத்தானே சிபாரி செய்திருக்கணும். ஒன்றியச் செயலாளராக நியமிக்கச் சொல்லி உங்களோட பெயரைத்தானே சிபாரிசு செய்திருக்கிறார். இப்படி பொய் புகார் கொடுக்கலாமா?’ என்று சொல்லியிருக்கிறார்.

இதையடுத்து அந்த சிபாரிசு பட்டியலைப் பார்த்து வெலவெ லத்துப் போனாராம் முருக்கோடை ராமர். அதுமட்டுமில்லாமல் தான் புகார் அளித்ததற்காக அங்கேயே மன்னிப்பும் கேட்டுள்ளார். ஆனால் தங்க தமிழ் செல்வனிடம்தான் மன்னிப்பு கேட்க வேண் டும் என்று அறிவுரை சொல்லி அனுப்பியதாகச் சொல்கிறார்கள். இதையடுத்து தேனிக்கு வந்த முருக்கோடை ராமர், மாவட்ட செய லாளர் தங்க தமிழ் செல்வனை சந்தித்து மன்னிப்புப் கேட்டாராம்.

இருந்தாலும் ஆசைப்பட்ட பதவியை அடைய இருந்த நிலையில் அறியாமல் புகார் கொடுத்துவிட்டால் மீண்டும் அந்த ஆசை கைகூ டாமல் போய்விடுமோ என்கிற கவலையில் இருக்கிறாராம் ராமர். அதேசமயம் புகார் சொன்ன அதே ராமரை ஒன்றிய செயலாளர் பத விக்கு சிபாரிசு செய்திருந்தது தங்க தமிழ்செல்வனையும் காப்பாற்றி யிருக்கிறது. தலைமையின் நம்பிக்கையைப் பெற்றுவிட்ட மகிழ்ச்சி யில் இருக்கிறார் தங்க தமிழ் செல்வன்.

இதற்கிடையே கட்சித் தலைமை என்ன அறிவிப்பு வெளியி டப் போகிறதோ என்கிற ஒருவித எதிர்பார்ப்பில் இருக்கிறது தேனி மாவட்ட அ.தி.மு.க. என்கிறது அந்த வட்டாரம்.

நாம் முருக்கோடை ராமரை இரண்டு முறை இடைவெளி விட்டுத் தொடர்பு கொண்டு கேட்டோம். ஆனால் ‘தான் பிஸியாக இருப்ப தாகவும் பிறகு தொடர்புகொண்டு பேசுவதாகவும்’ சொன்ன ராமர் இக்கட்டுரை அச்சேறும் வரை பேசவே இல்லை.

